வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹு
கார்த்திகைமீ அஉ வியாழக்கிழமை

## தெருவீதிகளின் சிதைவுற்ற நிலை

சில வருடங்களாக இந்த இலங்கை நாட்டிலேயுள்ள தெருவீதிகள், இவற்றுள்ளும் இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள தெருவீதிகள் முன்னெக் காலத்துமில்லாத சீர்கெட்ட நிலையிற் கிடக்கின்றனவென்பதை எவரேனும் மறுத்துரைக்கு முன்வர மாட்டாரென நினைக்கின்றேம். முன்னரைக் காட்டிலும் இக்காலத்திலே மாட்டு வண்டி, குதிரை வண்டி, துவிசக்கரம் (சைக்கிள்) "றிக்சோ", மோட்டரதம், பஸ் என்னுமிவைகள் இடையறாது இத் தெருவீதிகளால் அதிகஞ் சஞ்சரிப்பதோடு இப்பொழுது சில காலமாகப் பாரிய திண்மையான சேனை லொறிகள் கணக்கின்றி இத் தெருவீதிகளினூற் போக்கு வரவு செய்யத் தலைப்பட்டுக் கொண்டன; இவைகளின் சஞ்சாரத்தினால் தெருவீதிகளிற் சிதைவு அதிகமுண்டாதல் நிசமாகும்; பின்னே சொல்லப்பட்ட சேனை லொறிகளுக்குத் தெருவீதிகள் ஒப்பரவாக இருந்தாலென்ன இல்லாதொழிந்தாலென்ன காரியமில்லையாம். அவைகள் எந்த நிலையிலும் ஓடத்தக்கன; ஆனால் மேலே சொல்லப்பட்ட ஊரவர்கள் ஊர்ந்து செல்லும் பலவகையான வண்டிகளே இத் தெருவீதிகளினூற் பெரிதும் பாதிக்கப்படுவனவாகும்; மாரிக் காலத்திலே இத்தெருவீதிகள் வெள்ளத்தினூற் பல இடங்களற கரைவுண்டு, அளறுண்டு சிதைந்துபோக, பாதைகள் எங்கும் குழிகளுண்டாயின, அந்தக் குழிகளில் வெள்ளம் நிலையாக நின்றுவிட, நீர் வாழ்வனவாகிய தவளை வாய்ம்பேத்தைகள் தாமும் ஆங்கு சஞ்சரிக்கக் காணப்பட்டு கின்றனவே; மோட்டரதங்கள், பஸ்கள், குதிரை வண்டி மாட்டு வண்டிகள் இந்தத் தெருவீதிகள் மார்க்கமாகப் போகும்போது மாறிமாறி அவற்றின் சிறுசிறு குழிகளில் வீழ்ந்தும் திடர்களில் ஏறியும் உருளும்போது உண்டாகிற குலுக்கமும், குறித்த வண்டிகளில் ஏறியிருப்போர் அடையும் குலுக்கமும் நடுக்கமும் அச்சமுஞ் சற்றல்லவே! சில தெருவீதிகள், தெருவீதியென்ற நிலைமை மாறிக் கல்லொடும் மணலொடுஞ் சகதியோடுங் கூடிய ஒழுங்கைகள் போற் காணப்படுகின்றன. தெருவீதிகள் இப்படிச் சிதைந்த நிலைமையிலிருத்தலினாலே அவற்றால் போக்கு வரவு செய்யும் வண்டிகளுக்கும் இரதங்களுக்கும் சேதமுண்டாகின்றனவெனச் சொல்லப்படுகிறது. மேலும் ஒரு நாட்டிற்காக, அந்நாட்டிலுள்ள பட்டினங்கட்காக, குன்றா அழகைக் கொடுப்பன அங்குள்ள தெருவீதிகளின் சீரான நிலைமையல்லவா?

இங்குள்ள தெருவீதிகளின் இந்தச் சிதைந்த நிலையை ஊரவர்கள் மாத்திரமல்லர், இப்படியான பத்திரிகைகள் மாத்திரமல்ல, மாகாணத் தலைவர் போன்ற பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களும், அரசாங்க சபைப் பிரதிநிதிகள், பட்டினசங்க வட்டாரப் பிரதிநிதிகள், கிராமச் சங்கத் தலைவர்கள் முதலியோரும் எடுத்துக்காட்டிப் போக்குவரவுப் பகுதி மந்திரியாருக்குத் தெருட்டுதல் வேண்டும்; அந்த மந்திரியாரை இந்த வடபகுதிக்கு வரவழைத்து இத் தெருக்கள் மார்க்கமாகப் போக்குவரவு செய்து பார்க்கும்படி கேட்க வேண்டும்; தம் அனுபவத்தில் நேரே கண்டாற்றான் அம் மந்திரியாரும் இவற்றின் நிலைமையை உள்ளபடி விளங்கி ஆகவேண்டியதைச் செய்துவைப்பார்.

## சேர். சப்ரூ முயற்சி

இந்தியாவின் அரசியல் நிலைமையோ நாளுக்குநாள் கேவலநிலையை அடைகிறது. மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் அரசாங்கமும் விட்டுக்கொடுக்கும் முறையைப் பின்பற்றுவதாகக் காணவில்லை. காந்திஜி எவ்வளவோ முயன்றும் ஜின்னா தம்முயலுக்கு மூன்றே காலெனத் தனது பாக்கிஸ்தானத்தையே நிலைநாட்டவேண்டுமென்கிறூர். ஆகவே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை என்றும் ஏற்படாதா? என்ற கேள்வி எழுகின்றது. இக்கேள்வி சகல இந்திய அரசியல் வாதிகளையும் துன்புறுத்துகின்றது. துன்புறுத்தலைப் பழுத்த அரசியல் வாதிகள் இந்திய விடுதலைக்கு ஏதாவது வழி காண முனைந்து நிற்கின்றனர். இவ்வகையில் ஸேர். சப்ரூ துணிந்து முன்வந்திருக்கிறூர். அவர் மூப்பற்ற கட்சிப்பற்றற்ற மகாநாட்டு நிருவாகசபை ஆங்கீகரித்திருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன. சப்ரூ நிருவாகசபை வெற்றிகாணுமிடத்தும் பொறுப்பும் கடமையும் பகர்த்தானது. ஒரு முடிவைக் காண்பது எளிதல்ல, பலரும் ஏற முயன்ற ஹிந்து முஸ்லிம் குதிரையில் சேர், சப்ரூ ஏற முயற்சிப்பது ஓர் பகீரதப் பிரயத்தனம் என்பதை அவர் நன்குணர்ந்து தம் பிரயத்தனத்தில் வெற்றி தோல்வி இல்லையென்றும், நிருவாகசபையின் முடிவை முற்றாகவோ அல்லது பாகமாகவோ ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாமெனவும் கூறியுள்ளார். சிலர் தம்மைக் கண்டித்துப் பேசலாம், இன்னுஞ்சிலர் "நிர்மாணவேலையோ, இந்த மகத்தான வேலையை ஏற்பதா; உம்மால் காரியம் சாதிக்க முடியுமா?" என்று கடைசியாக எதற்கும் கேட்கலாம் என்றும் அவர் சொல்லுகிறூர். ஆகவே உள்ள சகல கஷ்டங்களையும் நன்குணர்ந்து அவர் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையிலும் இந்திய விடுதலையிலும் முனைந்து நிற்கின்றூரென்று சொல்வதற்கிடமில்லை.

மிகுந்த அடக்கத்துடனேயே இப்பெருமுயற்சியில் இறங்கியுள்ளார். இவர் வழியில் முட்டுக்கட்டைகள் பலவிருப்பினும் மகாத்மா காந்தி அளித்துள்ள ஆதரவு ஸேர், சப்ரூவுக்குப் பெரும் உதவியாகும். இந்தியாவின் மிகப் பெரிய அரசியல் ஸ்தாபனமாகிய காங்கிரஸின் ஆதரவை அவர் பெற்றுள்ளார். இன்னும் ஜனாப் ஜின்னாவையும் டாக்டர் அம்பேத்காரையும் சந்திப்பாரென்று தெரிகிறது. இந்தியாவின் சுதந்திரத்தை விரும்பும் எவரும் இதில் ஒத்துழைக்கவேண்டும். தம் சுயநலத்தை விரும்பி இந்தியாவின் விடுதலையைப் பற்றி மீட்டுவது அடிமை வாழ்வை நீடிப்பதாகும். வகுப்பு வாதத்தை ஒழிப்பதற்கு இதுவே தக்க தருணமாகும்.

இன்னுஞ் சாத்தியமானவரையில் பிணக்குக்கு இடமில்லாதபடி நடைமுறையைச் சப்ரூ வகுத்துள்ளார். பக்ஷபாதமும் பட்சபாதமுமின்றி நீதிபதிகள் முறையில் வகுப்பு அரசியல் விவகாரத்தை ஒரு சபை பரிசீலனை செய்யுமாம். அச்சபையில் மகாத்மாவின் யோசனையைக் குறித்துக் கட்சிப் பிரதிநிதிகள் ஸ்தானம் பெறமாட்டார்களாம். மத்தியஸ்த முறையில் சட்ட நிபுணர்களே இருப்பார்களாம். இரண்டு இளைப்பாறிய நீதிபதிகளாவது இருக்கவேண்டுமென்பதாகவே கோரப்படுகின்றது. ஸேர். மோரிஸ் குவையரே இச்சபையின் தலைவராக இருப்பாரெனவும் நம்பப்படுகிறது. இத்தகைய ஒரு சபை பொதுமக்களிடமும் அரசாங்கத்திடமும் மதிப்புப் பெறுமென்பதிற் சந்தேகமில்லை. சகல அரசியற் கட்சிகளின் கோரிக்கைகளும் சபையினால் நன்கு பரிசீலனை செய்யப்படுமாம். எல்லா பரிசீலனை செய்யப்பட்டு முடிவு இந்தியாவிற்குச் சாதகமான ஒரு திட்டம் தயாரிப்பது சபையின் முக்கியமான வேலை.

இந்தியாவிலுள்ள சகல பிரிவினருக்கும் ஏற்கக்கூடிய ஒரு முடிவுக்கு வரும் பக்ஷத்தில் அரசாங்கமும் அதைப் புறக்கணிக்க முடியாது. 'இந்தியர் தங்களுக்குள் பரஸ்பர ஒற்றுமைப்படவேண்டும் முதலில் ஒற்றுமையுறுங்கள்' என பிரிட்டிஷார் கூறிவரும் போலி நியாயத்துக்கும் இது ஒரு தக்க பதிலாகும். தேசமக்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து உருவாக்கும் ஒரு சமரசத் திட்டத்தை பிரிட்டிஷார் நிராகரித்துவிடுவார்களென்று நம்புவதற்கிடமில்லை. அதைப்பற்றி இந்திய மக்கள் இப்பொழுது யோசிக்கவேண்டிய தேவையுமில்லை. முதலில் இந்தியர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட வழிகாணவேண்டும். இந்நிலையில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிகோலும் ஸேர் சப்ரூ நியமிக்கவிருக்கும் சபையானது இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெறுமென எதிர்பார்க்கின்றேம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—27)

### "காவல்தானே பாவையர்க் கழகு"

அந்தச் சமயத்தில் அஞ்சுகம் அங்கே வந்ததை முதலியாருக்குப் "பிடிக்க"வில்லை; "நீங்கள் சற்று முன்பு பயிற்சிக் கழகத்திற் சமுகமாயிருந்தீர்களே; இங்கு எப்பொழுது வந்தீர்கள்" என்று அஞ்சுகம் முதலியாரைக் கேட்க, அவர் "நான் இரஞ்சிதத்தின் பெயரைப் பதிவு செய்தற்காகிய விபரங்களைக் கேட்பதற்காக இப்பொழுதுதான் இங்கே வந்தேன்" என்று பதில் சொன்னூர்; "விபர மெல்லாம் அறிந்து கொண்டீர்களா" என்று பின்னரும் அவள் கேட்க, "சில விபரங்களைத்தான் கேட்டறிந்தேன்; ஏனைய விபரங்களை உன்னிடம் கேட்டறியும்படி இரஞ்சிதம் சொல்லுகிறுள்" என்னலும் "மற்றைய விபரங்களை நான் உங்களுக்கு இப்பொழுது சொல்ல வேண்டுமா? இல்லையேல் இனிமேற் சொல்லலாமா" என்று அஞ்சுகம் மீட்டுங் கேட்க, "இப்பொழுது உனக்குச் சிரமமாகவிருக்கும், இனிமேற் சொல்லலாம்" என்றூர் முதலியார்! பின்னரும் சற்றுநேரம் முதலியார் எங்களுடன் இருந்து நாலு வார்த்தைகளைப் பேசிவிட்டு எங்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு சிரித்த முகத்தோடு கூடியவராய் அவ்விடம் விட்டகன்றூர். முதலியார் அங்கு வந்ததையிட்டு அக்காள் வினவ நான் எனக்கும் அவருக்கும் இடையே நடந்த சம்பவத்தை உள்ளபடி சொன்னேன். கேட்ட அஞ்சுகத்தக்காள் சிந்தனையோடு கூடியவளாய்க் காணப்பட்டாள்; அதனை அவதானித்த நான், என் அக்காள் முகவாட்டத்துடனிருக்கிறீர்கள் நான் என்ன பிழை செய்தேன் என்று விசாரத்துடன் கேட்க, அஞ்சுகக் தக்காள் திடுக்குற்று "தங்காய், நீரா எனக்குப் பிழை செய்வது; நீர் எக்காலத்தும் எனக்கு எவ்வகையான பிழையுஞ் செய்ய மாட்டீரென்பதை நான் அறிவேன்; இங்கே வந்த இந்த மனுஷனையிட்டுத்தான் கவலைப்படுகின்றேன், நல்ல மனுஷன்; ஆனால் ஒரு பெரும் பிழைதான் அந்த முதலியாரிடத்தில் இருக்கிறது" என்று துயரத்துடன் சொல்ல, என்ன பிழை அக்கா என்று நான் அவளிடம் கேட்டேன்; "வேறொன்றுமல்ல, தங்காய், நான் இங்கில்லாத நேரத்திலே, அதுவும் அந்த வேளையில் இவர் இங்கே வருவது நியாயமல்ல; அதனையிட்டுத்தான் யோசிக்கின்றேன்" என்று பரிவுடன் சொன்னுள் அஞ்சுகத்தமையாள்; கேட்ட நான் அகத்துட் சிரித்துக்கொண்டு "அக்கா, ஆர் ஆர் ஆவ தத்தம் மனதுக்கு எங்களையிட்டு என்ன நினைத்தாலும் என்ன, நிறையுடைய பெண்களை அவர்களாற் கெடுக்க முடியுமா! பெண்ணைப் பாதுகாப்பது தனக்குரியதாகிய மனக்கட்டுப்பாடாக இருப்பாளானால் ஆடவரால் எவ்வளவும் அவளை என்ன செய்யமுடியும்? இதுபற்றியல்லவா வள்ளுவப் பெரியாரும்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்"

எனக் கூறியுள்ளார். அல்லாமலும் பெண்களாகிய எங்களுடைய மானத்தைப் பாதுகாப்பன நாம் இருக்கும் வீட்டின் நான்கு சுவர்களல்லவாம்; அறையின் பூட்டுத் திறப்புக்களல்லவாம்; காப்பவர் பெற்றூர் உற்றூர் பெரியோரல்லராம்; எங்களெங்கள் மனத்திண்மை தானும் எங்கள் அருங் கற்பைக் காப்பது; இதனையிட்டே,

"சிறைகாக்குங் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பேதலை"

என வள்ளுவனூரும் "காவல் தானே பாவையர்க்கழகு" என எங்கள் மூதாட்டியும் முந்தியே சொல்லிவிட்டார்கள்; ஆதலால் அக்கா, அந்த முதலியாரால் என் மானத்திற்கு ஏதும் பங்கஞ் செய்ய முடியாதென்பதை எண்ணிக் கொள்ளுங்கள்; மேலும் பெண்கள் இசையாத பட்சத்தில் ஆடவன் கொண்ட தன் நோக்கம் கைகூடியதைப் பாடல் படிப்பில் எங்கேனும் பார்த்ததுண்டா? படித்தவர்கள் சொல்லக் கேட்டதுண்டா! இரண்டுமில்லையே; இந்திரன் தேவேந்திரன் இச்சைப்பட்டான்; சானகிமேல் இராவணன் ஆசை வைத்தான்; தமயந்தி மீதில் வேடனொருவன் ஆவல் கொண்டான்; விரதசாரணியெனவிருந்த பாஞ்சாலிமீது கீசகன் மோகங் கொண்டான்; புலஸ்தியனது தேவியாக புதுப் பூங்கோதை மேல் வனசர் ஒருவன் காதல் வைத்தான்; அவர்கள் கொண்ட துர்நோக்கத்தினால் அவர்கள் மாண்டார்களேயொழிய, அந்த உத்தமிகளான கற்பு நெறிக்கு ஏதும் பங்கம் ஏற்பட்டதா? இல்லையே; இன்னும் அவர்கள் கொண்ட தீய நோக்கத்தால், அந்த உத்தமிகளுடைய கற்பு நிலையும் புகழும் நிலைகுலைவதல்லாமல் அவர்களுக்கு ஏதும் குறை நேர்ந்ததுண்டா" என்று பல நியாயங்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

